பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 10 திங்கட்கிழமை 24.03.2025 | அதிர்வு 233

## பிரிட்டனின் முக்கிய அறிவிப்பு இன்று இரவு



பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்கான இயக்குநர் பென் முல்லர் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# மஹிந்த, ரணில், சஜித் மூவரும் ஒன்றிணைவா?

## அப்பட்டமான பொய் என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்

“சஜித், மஹிந்த, ரணில் இணையவுள்ளனர் என்று பல்வேறு பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. அது மாத்திரமல்லாது அவ்வாறு செய்தி வெளியிட்டு தொலைக்காட்சி அலைவரிசைகளில் காலையில் பத்திரிகை முக்கிய செய்தி வாசிப்பு நிகழ்ச்சிகளில் தலைப்புச் செய்திகளாக முன்னிலைப்படுத்தப்படுகின்றன. இது அப்பட்டமான பொய்யாகும்.”

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

“ஐக்கிய மக்கள் சக்திக்கு யாருடனும் சேர வேண்டிய தேவை இல்லை. இவ்வருடம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி பெரும் வெற்றியடைவதைத் தடுக்க, வங்குரோத்து அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து பொய்யான செய்திகளைப் பரப்பி வருகின்றன.” - என்றும் அவர் கூறினார். 02

# நல்லூர் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அர்ச்சுனா - ரஜீவன் நக்கல் நையாண்டி

(பிரபாகரன் டிலக்சன்)



யாழ். நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் ஆகியோர் ஒருவருக்கொருவர் அரசியல் ரீதியான நக்கல் நையாண்டிகள் செய்து நேரத்தை வீண்விரயம் செய்ததால் கூட்டத்தில் பங்கேற்ற பல பொதுமக்கள் ஆத்திரமடைந்தனர்.

நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு 02

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# வவுனியாவில் காசநோயால் கடந்த வருடம் 9 பேர் இறப்பு

(கி.வசந்தன்)

காசநோயால் வவுனியாவில் கடந்த வருடம் 9 பேர் இறந்துள்ளதுடன் 56 பேர் நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று வவுனியா மாவட்ட காச நோய் கட்டுப்பாட்டு பிரிவின் வைத்திய பொறுப்பதிகாரி கே.சந்திர குமார் தெரிவித்தார்.

வவுனியாவில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இம்முறை" ஆம் எங்களால் காசநோயை முடிவுக்கு கொண்டுவர முடியும்" எனும் தொனிப்பொருளில் உலக காசநோய் தினம் மார்ச் 24 ஆம் திகதி நினைவு கூரப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்த வரை ஒரு இலட்சம் பேரில் 62 பேர் காச நோயாளர்களாக அடையாளம் காணப் பட வேண்டும். ஆனால், கடந்த வருடம் 8 ஆயிரம் பேரே நோயாளர்களாக அடை யாளம் காணப்பட்டுள்ளனர். விகிதா சாரத்தின்படி அதன் எண்ணிக்கை 14 ஆயிரமாக இருக்க வேண்டும்.

கடந்த வருடம் வவுனியா மாவட்டத்

## 56 பேர் பாதிப்பு

தில் 56 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அதில் 9 பேர் உயிர் இழந்துள்ளனர். அவர்கள் நோய் வந்து உரிய நேரத்தில் சிகிச்சைக்கு வராமல் காலதாமதமாக வந்தமையால் அந்த மரணம் ஏற்பட்டது.

குறிப்பாக தொடர்ச்சியாக இரண்டு வாரங்களுக்கு மேற்பட்ட இருமல், மாலை நேரத்தில் காய்ச்சல், உணவில் நாட்டம் இன்மை, உடல்நிறை குறை வடைதல், சளியுடன் இரத்தம் வெளி யேறல் என இப்படியான அறிகுறிகள் தென்பட்டால் அது காசநோயாக இருக்க லாம்.

மேற்கூறிய அறிகுறிகள் இருந்தால் அருகில் உள்ள பொது வைத்தியசா லைகளுக்குச் சென்று சாதாரண சளிப் பரிசோதனையை இலவசமாகச் செய்து கொள்வதன் மூலம் இந்த நோயை அடையாளம் காணலாம்.

எந்தவித அறிகுறியும் இல்லாமலும் இந்த நோய் உடலில் இருக்கலாம். குறிப் பாக ஏற்கனவே நோய் ஏற்பட்ட வர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் அல்லது நாட்பட்ட நோய் கொண்டவர்




கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த வர்கள், சிறுநீரக நோயாளர்கள் போன்ற நோய்கள் உள்ளவர்களுக்கு அறி குறிகள் வெளிப்படாமல் இந்த நோய்க் கிருமி தங்கக்கூடும். அப்படியான வர்களுக்குப் பரிசோதனையைச் செய்வதன் மூலம் அதனைக் கண்டறி யலாம்.

ஒருவருக்குக் காசநோய் ஏற்பட் டால் ஆறு மாதத்துக்கு நேரடி கண் காணிப்புடனான சிகிச்சையின் மூலம் மருந்துகளைப் பெற்றுக்கொண்டால் அதனை முற்றாகக் குணப்படுத்த லாம். அதற்கான மருந்து உள்ளது. அது தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை. சிகிச்சைகளை எடுக் கத் தவறினால் அது தீவிரமடைந்து இறப் புக்கு வழிவகுக்கும்." – என்றார்.

# அடையாளம் தெரியாத ஆணின் சடலம் மீட்பு!

வத்தளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அவரகொட்டுவ பிரதேசத்தில் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள் ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்று வத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

45 வயது மதிக்கத்தக்க 5 அடி 7 அங்குலம் உயரமுடைய நபரே நேற்று ஞாயிற்றுக்கிழமை சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

சடலமானது ராகம வைத்தியசாலை யின் பிரேத அறையில் வைக்கப்பட் டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை வத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அடையாளம் தெரியாத...

கிடைக்கவில்லை என்று வத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

45 வயது மதிக்கத்தக்க 5 அடி 7 அங்குலம் உயரமுடைய நபரே நேற்று ஞாயிற்றுக்கிழமை சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

சடலமானது ராகம வைத்தியசாலை யின் பிரேத அறையில் வைக்கப்பட் டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை வத்தளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

### நல்லூர்...

மண்டபத்தில் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பி னர் ரஜீவன் தலைமையில் இடம்பெற் றது.

கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. இதன் போது பல விடயங்களில் நாடாளு மன்ற உறுப்பினர் அர்ச்சுனா மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ரஜீவன் ஆகியோர் ஒருவருக்கொருவர் அரசியல் ரீதியான நக்கல் நையாண்டி கள் செய்து நேரத்தை வீண்விரயம் செய்ததால் கூட்டத்தில் பங்கேற்ற பொதுமக்கள் ஆத்திரமடைந்தனர்.

"உங்கள் அரசியலையும் நக்கல், நையாண்டிகளையும் இங்க கதைச்சு நேரத்தை வீணாக்காதீர்கள்" – என்று சபையில் அவர்கள் காட்டமாகத் தெரி வித்தனர். அதன் பின்னர் ஓரளவு அர சியல் நையாண்டிகள் இன்றி கூட்டம் முன்னெடுக்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

### மஹிந்த...

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக் கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட வேட்பாளர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த அரசு செய்ததையே மீண்டும் செய்வது முறைமை மாற்றமல்ல. மக்களை ஏமாற்ற ஐக்கிய மக்கள் சக்தி அச்சப்படுகின்றது. பொய்யை நம்ப வைப்பதற்கும், மக்களை அரசியல் ரீதி யாக ஏமாறுவதற்கும் நாம் பயப்படு கின்றோம். ஐக்கிய மக்கள் சக்தியா னது முடிவுகளை எடுக்கும் விடயத்தில் சரியான முடிவுகளையே எடுத்து வரு கின்றது.

இன்று அரசானது பல்வேறு தலைப்புச் செய்திகளை தூக்கிப் பிடித் துக் கொண்டு, ஐக்கிய மக்கள் சக்தி பல்வேறு கட்சிகளுடன் கூட்டு சேர முயற் சிக்கின்றது எனப் போலியான செய்தி களைக் கட்டமைத்து வருகின்றது. ஆனால், ஐக்கிய மக்கள் சக்தி ஒரு போதும் அத்தகையதொரு தீர்மானத்துக்கு வராது. நாம் இவர்களோடு இணையோம்.

ஐக்கிய மக்கள் சக்தி முதன்முறை யாக உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதாலயே இவ்வாறான செய்திகளை வெளியிடுகின்றார்கள்." – என்றார்.

### பிரிட்டனில்...

இலங்கை வந்துள்ளார்.

அவர் இலங்கை தொடர்பான பிரிட்டனின் முக்கிய நிலைப்பாடு பற்றிய ஓர் அறிவித்தலை இன்று இரவு விடுப்பார் என நம்பகரமாகத் தெரியவருகின்றது.

இந்தப் பிராந்தியத்தில் உள்ள தமது நாட்டின் தூதுவர்களுடன் கலந்தா லோசனை நடத்திய பின்னர் மேற்படி அறிவிப்பை அவர் விடுக்கவுள்ளார் எனவும் அறியமுடிகின்றது.

# பண மோசடி வழக்கிலிருந்து உதய கம்மன்பில விடுதலை



போலி ஆவணம் தயாரித்து ஆஸ்திரேலிய பிரஜை ஒருவருக்குச் சொந்தமான பங்குகளை விற்பனை செய்து 21 மில்லியன் ரூபா மோசடி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் வர்த்தகர் ஜயசிங்க ஆகியோரைக் குறித்த குற்றச்சாட்டிலிருந்து விடுவித்து விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

நீண்ட காலமாகத் தொடரப்பட்ட இந்த வழக்கு மேல் நீதிமன்ற நீதிவான் நாமல் பண்டார பலல்லே முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 முதல் 1997 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25 ஆகிய திகதிகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் போலி ஆவணம் தயாரித்து ஆஸ்திரேலியப் பிரஜை ஒருவருக்குச் சொந்தமான பங்குகளை விற்பனை செய்து 21 மில்லியன் ரூபா மோசடி செய்தார் என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் வர்த்தகர் ஜயசிங்க ஆகியோருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் வர்த்தகர் ஜயசிங்க ஆகியோருக்கு எதிராக போதுமான சாட்சிகள் இல்லாத காரணத்தால் அவர்களை வழக்கிலிருந்து விடுவித்து விடுதலை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வவுனியாவில் காசநோய் தொடர்பில் ஓட்டோக்களில் விழிப்புணர்வு பேரணி

(கி.வசந்தன்)

வவுனியாவில் காசநோய் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் இன்று இடம்பெற்றது.

வவுனியா வைத்தியசாலை உள்வட்ட வீதியில் அமைந்துள்ள வவுனியா மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் ஆரம்பித்த விழிப்புணர்வு ஊர்வலம், யாழ். வீதியை அடைந்து வைத்தியசாலை சுற்று வட்ட வீதி ஊடாக கண்டி வீதியால் சென்று மணிக்கூட்டுக் கோபுர சந்தி ஊடாக பசார் வீதியை அடைந்து ஹொரவப்பொத்தானை வீதி ஊடாக வைத்தியசாலையைச் சென்றடைந்தது.




இதன்போது காசநோயைக் கட்டுப்படுத்துதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

இதில் வைத்தியர்கள், தாதியர்களுடன் நூற்றுக்கும் மேற்பட்ட ஓட்டோக்கள் கலந்துகொண்டன.

# செம்பியன்பற்று மாணவர்கள் கௌரவிப்பு



(வடமராட்சி நிருபர்)

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கு பிரதேசத்தை சேர்ந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை சென். பிலிப் நேரிஸ் ஆலய வாராந்த திருப்பலியின்போதே இவர்கள் கௌரவிக்கப்பட்டன.

செம்பியன்பற்று கடற்றொழிலாளர் சங்கத்தின் நிதி அனுசரணையில் ஆலய அருட்சகோதரியால் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.







# மதுரங்குளி முக்குத்தொடுவா வீதிக்கான தற்காலிக மாற்று பாதை திறந்து வைப்பு!

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

புத்தளம் மதுரங்குளி முக்குத்தொடுவா வீதியில் உள்ள டச்சுப் பாலத்தின் புனரமைப்புக்காக மூடப்பட்ட வீதிக்கான மாற்றுப் பாதை சனிக்கிழமை மதுரங்குளி வர்த்தக சங்கத் தலைவர் எம்.எஸ்.டி. அமானால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

திறப்பு விழாவில் கடையாமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி அதிபர் எம்.எச்.எம். தௌபீக், மதுரங்குளி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, மதத்தலைவர்கள், மதுரங்குளி வர்த்தக சங்க உறுப்பினர்கள், வர்த்தகர்கள், ஊர்மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பாதாள உலக மறுமலர்ச்சி

இலங்கை மக்கள் எதிர்பார்த்த - தாங்கள் பெற்றுத் தருவார்கள் எனத் தேசிய மக்கள் சக்தி தரப்பினர் தேர்தல்களுக்கு முன்னர் மக்களுக்கு வாக்குறுதி அளித்த - நாட்டின் மறுசீரமைப்பு என்பது சாத்தியமற்றுப் போய்விட்டது. மாறாக, பாதாள உலகக் குழுவினருக்குத்தான் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. பல்வேறு வடிவங்களில் பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கைகள் தீவிரமாகத் தலைதூக்க தற்போதைய அரசாங்கம் இடம் அளித்துப் பார்த்திருக்கின்றது.

- இவ்வாறு சுட்டிக்காட்டி இருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ.

அவரது கூற்றில் உண்மை இருப்பது மறுக்க முடியாதது.

பாதாள உலகத்தின் வேர்களை - துப்பாக்கிதாரிகளின் கடத்தல் கலாசாரத்தை - கொலைக் கலாசாரத்தை - மர்மமான முறையில் விடயங்களை முன்னெடுத்துச் செல்லும் கலாசாரத்தை இலங்கை மண்ணுக்கு - மக்களுக்கு - முதல் முதலில் அறிமுகம் செய்தது இப்போது ஆட்சி அமைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பியின் தேச பக்தி இயக்கம்தான்.

ஜனநாயகத்துக்கு எதிரான - மாறான - வன்முறை அரசியலை, துப்பாக்கி முனையில் ஆட்டிப்படைக்கும் கலாசாரத்தை அறிமுகப்படுத்தியவர்கள் இவர்கள்தான் என்பதை நாட்டு மக்கள் மறக்க மாட்டார்கள். பொதுமக்களுக்கான மறுமலர்ச்சி அடிபட்டு போக, பாதாள உலகக் குழுக்களின் புதிய மறுமலர்ச்சி யுகம் இந்த ஜே.வி.பியின் ஆட்சிக் காலத்தில்தான் பிறந்திருக்கின்றது என்று சஜித் பிரேமதாஸ கூறுவதில் அர்த்தமில்லாமல் இல்லை.

தீவிர முதலாளித்துவ எதிரிகளாகத் தங்களை அடையாளப்படுத்தியவர்கள் - தீவிர சோஷலிச கொள்கையில் இருந்து விலகாதவர்கள் என்று தங்களை கூறிக் கொண்டவர்கள் - இப்போது முதலாளித்துவ பாதையில் பயணிக்கின்றமையை மக்கள் பார்க்கின்றார்கள் என்று சஜித் பிரேமதாஸ சுட்டிக் காட்டுவது கவனிக்கத்தக்கது. அதுவும் கூட உண்மைதான்.

இந்த அரசாங்கத்தின் ஆட்சியில் பாதாள உலகக் குழுக்களின் அட்டகாசம் எல்லை மீறி வருவது புள்ளி விவரங்களில் அம்பலமாகியுள்ளது.

இந்த ஆண்டில் ஜனவரி முதலாம் திகதி முதல் இதுவரை நாடு முழுவதும் 27 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 22 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கல்கிஸை, மன்னார், காலி, கொட்டாஞ்சேனை, தெவிநுவர உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த நாட்டுக்கு துப்பாக்கிக் கலாசாரத்தை அறிமுகப்படுத்தியவர்கள் ஜே.வி.பியினர்தான் என்று சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்துவதும் தவறல்ல. 1971இல் சட்ட ரீதியான அரசாங்கத்தை ஆயுத முனையில் கவிழ்ப்பதற்காக கிளர்ச்சி செய்த சதி புரட்சியாளர்கள் ஜே.வி.பியினர்தான். அந்தப் பிரச்சினையில் பல்லாயிரக்கணக்கில் கொல்லப்பட்டும் கைதாகியும் நெருக்கடிகளை எதிர்கொண்ட ஜே.வி.பியினர் பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்ட பின்னர், 1988 - 89 களிலும் அதே கிளர்ச்சியைச் செய்தார்கள்.

இப்போது அவர்கள் ஆயுதங்களை - வன்முறைகளை - கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பி விட்டார்கள் என்று கூறினாலும், அதிலே நேர்மையாக அவர்கள் செயல்பட்டாலும், அவர்களின் ஆட்சியின் கீழ் அதேபோன்ற வன்முறைப் போக்குக் கொண்ட பாதாள உலகக் குழுக்கள் மறுமலர்ச்சி கண்டு வருகின்றன.

இந்தக் குழுக்களை அடக்குவதைக் கங்கணம் கட்டிச் செயற்பட்டு வந்த பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மீது சட்டம் பாய்கின்றது. ஆனால் பாதாள உலகக் குழுக்களின் அத்துமீறலை அடியோடு அடக்கும் செயற்பாட்டை - அந்தச் சட்டத்தினால் செய்ய முடியாமல் இருக்கின்றது.

ஆயுத வன்முறையின் விவகாரத்தை நன்கு புரிந்த ஆட்சித் தரப்பினால், அதே முறையில் அட்டூழியம் புரியும் பாதாள உலகம் குழுக்களைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்றது என்பது - அதில் தீவிரம் காட்டி அதனை அடியோடு அடக்கப் பயனுறு நடவடிக்கைகளை எடுக்க முடியாமல் இருப்பது என்பது - ஆட்சித் தரப்பின் மோசமான பின்னடைவு நிலைதான்.



# மட்டு.சமூக மேம்பாட்டு மையத்தால் அரசாங்க அதிபருக்கு கௌரவம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதிவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் விசேட இப்தார் நிகழ்வு காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சனிக்கிழமை ( 22 ) இடம்பெற்றது.

அகில இலங்கை சமாதான நீதிவானும் ஊடகவியலாளரும் மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதிவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் தலைவருமாகிய 'சாமஸ்ரீ தேசமான்ய' உ. உதயகாந்த் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும் மாவட்ட செயலாளருமான திருமதி ஜஸ்டினா யுலேகா முரளிதரன் கலந்து கொண்டார்.

இந் நிகழ்விற்கு ஆன்மீக அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட பல் சமய ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ வீ. கே.சிவபாலன் குருக்கள், காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க்.எச்.எம். எம்.இல்ஹாம் பலாஹி, அருட்தந்தை ஏ.யேசுதாஸ் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுக்கு விசேட அதிதிகளாக காத்தான்குடி பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் எம்.ரஹூப், மட்டக்களப்பு மாவட்ட ஊடகப் பிரிவின் பொறுப்பதிகாரி வடிவேல் ஜீவானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அளப்பெரிய சேவையாற்றி வரும் மாவட்ட அரச அதிபருக்கு கௌரவமளிக்கும் வகையில் அவரது சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி, மலர் மாலை அணிவித்து, நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

சங்கத்தால் ஏற்கனவே வெளியிடப்பட்ட "நீதியின் நிரல்" நூலின் பிரதியும் அரச அதிபருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதிவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் ஆரம்பகாலத் தலைவர் யோசப் இராஜேந்திரன் தவராசா, ஆரம்ப கால பொருளாளரும் முன்னாள் தலைவருமான அல்ஹாஜ் பாவலர் சாந்தி முஹியித்தீன், முன்னாள் உப தலைவரும் அமைப்பின் வளவாளருமான அ. அன்பழகன் குறூஸ், முன்னாள் உப தலைவர் கதிராமத்தம்பி ஜெயசுந்தரம், ஆரம்ப காலச் செயலாளர் பாலிப்போடி இன்பராசா, முன்னாள் உப செயலாளரும் தற்போதைய உப தலைவருமான அல்ஹாஜ் முகமது யூசுப் ஆதம், முன்னாள் செயலாளர் கந்தப்போடி தங்கராசா மற்றும் பொருளாளர் டாக்டர் சபாரெத்தினம் சுதர்சன் ஆகியோருக்கும் இதன்போது கௌரவமளிக்கப்பட்டது.



EVEREST FURNITURE
MODERN FURNITURE FOR YOUR HOME

(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA





## தமிழ்நிதி அருணா செல்லத்துரையின்

# இராவணனார் தெய்வீக மானிடர் வரலாற்று நூல் அறிமுக நிகழ்வு

**(மன்னார் நிருபர்)**

தமிழ்நிதி அருணா செல்லத்துரையின் இரவணனார் நூல் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் (22) பிற்பகல் 2 மணிக்கு மன்னார் மாவட்டச் செயலக மருதம் மாநாட்டு மண்டபத்தில் மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) மா. ஸ்ரீஸ்கந்தகுமார் தலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் திருக்கேதீஸ்வர ஆலய தவைவர், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர் .

சிறப்புப் பிரதிகள் வழக்கபட்டதைத் தொடர்த்து நூல் அறிமுக உரையை மன்னார் மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) மா. ஸ்ரீஸ்கந்தகுமார் வழங்கினார் .

நூல் நயவுரை பண்டிதர் திருமதி ஏ.சுஜானா வழங்கினார்

நூலாசிரியரால் நூல், பற்றிய விழக்கமும் கருத்துப் பரிமாற்றமும் இடம் பெற்றன.











# மூன்று புதிய வெளிநாட்டுத் தூதுவர்கள் நற்சான்றிதழ் பத்திரங்கள் கையளிப்பு

இலங்கைக்காகப் புதிதாக நியமிக்கப்பட்ட மூன்று வெளிநாட்டுத் தூதுவர்கள் இன்று திங்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விடம் தங்கள் நற்சான்றிதழ் பத்திரங்களைக் கையளித்த னர்.

பிரான்ஸ், பலஸ்தீன் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளின் புதிய தூதுவர்கள் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.


இதன்படி, பிரான்ஸ் தூதுவராக ரெமி லம்பேர்ட்டும், பலஸ்தீன தூதுவராக இஹாப் ஐ.எம். கலீலும், நேபாள தூதுவராக கலாநிதி பூர்ண பகதூர் நேபாளியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.


வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.









# ஆஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம் நடத்தும் தமிழ் மொழிச் சாதனை விழா 30 இல்!

ஆஸ்திரேலியா – விக்ரோரியா மாநிலத்தில் கடந்த 2024 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் தமிழ்ப் பாடத்தில் தோற்றி, மிகச்சிறந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை பாராட்டி கௌர விக்கும் நோக்கத்தில், ஆஸ்திரேலி யாவில் நீண்ட காலமாக இயங்கும் ஆஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம், தமிழ்மொழிச்சாதனை விழாவை எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மெல்பனில் நடத்த வுள்ளது.

இந்த நிகழ்வு மெல்பேர்னில் நடை பெறும்.

மெல்பனில் இந்த மாணவர்களுக் கான பாடசாலைகளை நடத்திவரும் அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்க ளும், ஆசிரியர்களும் மங்கல விளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பர்.

சங்கத்தின் தலைவரும் எழுத்தாள ரும், ஓவியருமான கிறிஸ்டி நல்லரெத் தினம் தலைமையில் நடைபெறவிருக் கும் இந்த விழாவில், திருமதி சாந்தி சந்திரகுமார் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவார்.

மாணவர்களுக்கான விருது வழங் கல் நிகழ்வையடுத்து, சித்திய டைந்த சில மாணவர்களின் உரைகளும் இடம் பெறும்.

இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள கலைநிகழ்ச்சியில், கடந்த அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக தான் பிறந்த இலங்கையிலும் இந்தியாவிலும் மற்றும் தமிழர் புலம் பெயர்ந்த நாடுகளிலும் பொப்பிசைத் துறையில்கோலோச்சிக்கொண்டிருக்கும் பொப்பிசைப்பிதா நித்தி கனகரத்தினம் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

அத்துடன் அவர் எழுதியிருக்கும் பாரம்பரிய தமிழர் உணவுகளின் யோச னைக் கூறுகள் என்ற நூலை மருத்துவர் திருமதி சியாமளா நடேசன் அறிமுகப் படுத்தி உரையாற்றுவார்.

பொப்பிசைப்பிதா நித்தி கனகரத்தி னத்தின் பாடல்களும் இடம்பெறும். மெல்பன் மிருதங்க இசைக்கலைஞரும், வளர்ந்துவரும் இளம்பேச்சாளருமான செல்வி அபிதாரணி சந்திரனின் மிருந் தங்க இசை நிகழ்ச்சியும் இந்த விழாவில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்து, தமிழ்ப் பாடத்தில் உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை வாழ்த்துமாறு ஆஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.





# பல் சமயத்தவர் இணையும் கலாச்சார நிகழ்வு

(றிபாஸ்)

ஜீ.ஐ.இசட். அமைப்பின் நிதி உதவி மூலம் விழுது நிறுவ னத்தின் அம்பாறை மாவட்ட ஐடோ இளைஞர்களால் நடத்தப்பட்ட அலிக்கம்பை தெலுங்கு சமூகத்தினருடன் பல் சமயத்தவர் இணையும் கலாச்சார மைய நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை நேற்று (23) இடம்பெற்றது.

பல் சமயத்தவர்களுடைய கலாச்சார, சமய முரண்பாடு களை கலைந்து சிறந்த சமூக நல்லுறவை கட்டியெழுப்பும் வகையிலான இந்த நிகழ்வு அருட்தந்தை ஜெகனின் அனுமதியுடன் நடைபெற்றது.

அலிக்கம்பை கிராமத்தைச் சேர்ந்த மக்களுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மும்மதங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும், சமய தலைவர்களும் கலந்து கொண்டனர்.

மும்மதங்களின் கலாசார விழுமியங்கள், பண்பாடுகள் தொடர்பான கருத்தாடல்கள் இங்கு நடைபெற்றன. மும்மதங்களதும் உணவுப் பழக்க வழக்கங்கள் தொடர்பான நடைமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டு அவரவர்களிடையே உணவு பரிமாற்றங்களும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் அலிக்கம்பை பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் ஆர்வத்தோடு கலந்து கொண்டனர். மும்மதங்களைச் சேர்ந்த தலைவர்களும் இது தொடர்பாக தங்களது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்த னர்.

இன ஒற்றுமையையும் சமய நல்லிணக்கத்தையும் பரப்பும் வகையில் இந்த அமைப்பு ஒவ்வொரு மாவட்டங்களிலும் கடந்த காலங்களில் இவ்வாறான நிகழ்வுகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.



# பல்துறைக் கலைஞர் பாராட்டி தமிழ்ச்சங்கத்தில் கௌரவிப்பு!

(பழுவூரான்)

கொழும்பு தமிழ்ச் சங்க நிறுவுனர் தின நிகழ்வு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் சனிக்கிழமை (22) நடைபெற்றபோது பல்துறை ஆளுமையுள்ள த.கோபாலகிருஷ்ணன் செங்கதிரோன் கௌரவிக்கப்பட்டார்.

இவருக்கான கௌரவிப்பு உரையை நிர்வாக குழு உறுப்பினர் மு.மனோகரன் நிகழ்த்தினார். கவிஞராக எழுத்தாளராக கலை இலக்கிய விமர்சனராக அரசியல் ஆய்வாளராக பளிச் சிடும் இவர் செங்கதிர் என்னும் சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருக்கின்றார்.

கிழக்கின் அரசியலில் தனித்துவம் பேணுவதுடன் இலக்கிய முயற்சிகளின் உந்துசக்தியாகவும் செயற்பட்டு வருகின்றார்.



# அட்டாளைச்சேனை பிரதேச அமைப்பாளர் பதவியில் இருந்து அமீர் இடைநிறுத்தம்!

## செயலாளர் சுபைர்தீன் தெரிவிப்பு

(அபு அலா)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அட்டாளைச்சேனை பிரதேசத்துக்கான அமைப்பாளர் பதவியிலிருந்தும், கட்சியின் உறுப்புரிமையிலிருந்தும் ஏ.கே அமீர் தற்காலியமாக இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று கட்சியின் செயலாளர் நாயகம் எஸ். சுபைர்தீன் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில், அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது, அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் நிலையில், கட்சியின் அமைப்பாளராகச் செயற்பட்ட ஏ.கே. அமீர் கட்சியின் தீர்மானத்தை மீறி, சுயேச்சைக் குழு ஒன்றின் வேட்பாளராக வேட்புமனுவை தாக்கல் செய்தமை காரணமாக அவர் அமைப்பாளர் பதவியிலிருந்தும், கட்சியின் உறுப்புரிமையில் இருந்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ளார்.



அவருக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகள் விரைவில் நடைபெறும் எனவும் செயலாளர் நாயகம் எஸ். சுபைர்தீன் தெரிவித்தார்.




# காசநோய் பற்றிய விழிப்புணர்வு மக்களிடம் அவசியம் தேவை!

**(காசநோய் தினம் இன்று (24) அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.)**

"லொக் டவுன்" என்றதும் எமக்கெல்லாம் நினைவில் வருவது கொரோனா. இது 2019 இல் நம்மை ஆட்டிப் படைத்த ஒரு சுவாசத்தால் பரவும் புதுவகை காச நோயாகவே பார்க்கப்பட்டது .

காசநோய் இன்று உலகில் 1.7 மில்லியன் மக்களை ஆண்டுதோறும் கொன்று குவிக்கும் ஒரு உயிர்கொல்லி நோயாக உள்ளது.

1880களின் தொடக்கத்தில் ஐரோப்பா, அமெரிக்கக் கண்டங்களில் காச நோய் தீவிரமாக இருந்த காலம். பல மருத்துவ விஞ்ஞானிகளும் நோய்க்கான காரணங்களை கண்டறிய ஆய்வில் ஈடுபட்டிருந்த நேரம். அந்த நேரத்தில் 1882ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் திகதி ஜேர்மனி மருத்துவ விஞ்ஞானி ராபர்ட் காஹ் என்பவர் காச நோயை உண்டாக்கும் பாசிலஸ் என்ற நுண்ணுயிரியைக் கண்டறிந்தார். அந்தக் காலத்தில் மருத்துவ உலகில் அதிர்வலைகளை ஏற்படுத்திய கண்டுபிடிப்பு இது.

ஆண்டுதோறும் 90 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு, ஏற்கனவே காசநோய் உள்ளவர்களிடமிருந்து பரவுகின்றது. இந்நோயால் ஆண்டுதோறும் 17 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர். மேலும், உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு பேர், இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காச நோய் (டியூபர்க்குலோசிசு) என்பது மைக்கோபாக்டீரியா என்னும் நுண்ணுயிரியின் தாக்குதலால் ஏற்படும் கடும் தொற்றுநோயாகும்.

தொடர்ந்து சளி இருப்பது, எடை குறைவு, காய்ச்சல், மார்பு வலி, இரவில் வியர்ப்பது, கால், கைகள் பலம் குன்றுதல் போன்றவை காசநோய்க்கான அறிகுறிகளாக இனங்காணப்பட்டுள்ளன.

1996 ஆம் ஆண்டில் இருந்து உலக சுகாதார அமைப்பு மக்களிடையே காச நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக இந்த நாளை அனைத்துலக காச நோய் தினமாகப் பிரகடனப்படுத்தியது.

காச நோய் பரவுதல் பற்றியும், அதைத் தடுப்பது குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக மார்ச் 24 ஆம் திகதி சர்வதேச காச நோய் தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா, நைஜீரியா மற்றும் இந்தோனேசியா உள்ளிட்ட 22 நாடுகளில் காசநோயால் புதிதாக பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகம்.

ஆரம்பத்திலேயே இதற்குச் சிகிச்சை மேற்கொள்வது, நீண்ட கால சிகிச்சை ஆகியவை இந்த நோயில் இருந்து பாதுகாக்கும் நடவடிக்கைகளாகும். காச நோய் உள்ளவர்கள், தயங்காமல் மருத்துவர்களை அணுகி சிகிச்சை எடுத்துக் கொள்ளல் ஆகியன இந்த நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான சிறந்த முறையாகும்.

அவ்வகையில், அரச தனியார் நிறுவனங்கள் புத்திஜீவிகள் என்று அனைவரும் காசநோய் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தி, மக்களை காக்க நடவடிக்கைஎடுக்க வேண்டும்.


நடராஜன் ஹரன்.

காச நோய் எனப்படும் டி.பி. ஒரு காலத்தில் உயிர்க்கொல்லி நோய். இன்றைக்கும் அந்த நோய் பரவும் முறைகளுக்கும் ஏற்படுத்தும் பாதிப்புகளுக்கும் குறைவில்லை. ஆனால், அந்த நோயைக் குணப்படுத்துவதற்கு மருந்துகள் இருப்பதுதான் ஒரே மாற்றம்.

டியூபர்செல் பாசிலஸ் அல்லது டியூபர் குளோசிஸ் என்பதன் சுருக்கம்தான் டி.பி.

வீட்டில் உள்ள ஒருவருக்கு இந்நோய் வந்தால், மற்றவர்கள் அஞ்சி ஓடும் நிலை முன்பு இருந்தது. இன்றோ காச நோய் உயிரைக் காவு வாங்கக் கூடிய அளவுக்குக் கொடிய நோயாக இல்லை. நோய் வந்தால் சில மாதங்களுக்கு முழுமையாக மருந்து, மாத்திரை எடுத்துக் கொண்டால் போதும். நோயை விரட்டிவிடலாம்.

இருமல், தும்மல், எச்சில் ஆகியவற்றிலிருந்து காற்றில் பரவும் தன்மை கொண்டது காச நோய். எனவேதான், அந்தக் காலத்தில் இந்நோய் பெரும் அச்சத்தை உண்டாக்கியது. இன்றைக்கும் அதே வழிமுறைகள் காரணமாகவே பெருமளவு மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்' என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

இந்தக் கண்டுபிடிப்புக்குப் பிறகே காச நோயின் தன்மை குறித்து மருத்துவ உலகம் அறிய முடிந்தது. மருந்துகள் கண்டுபிடிக்கும் பணியும், இதன் பின்னரே தீவிரமடைந்தது. இன்று இந்த நோய்க்கு மேம்பட்ட சிகிச்சை முறைகள் இருப்பதற்கு இந்தக் கண்டுபிடிப்பே முன்னோடி. இந்தக் கண்டுபிடிப்புக்காக 1905 ஆம் ஆண்டில் மருத்துவத்துக்கான நோபல் பரிசு ராபர்ட் காஹுக்குக் கிடைத்தது.

இந்தக் கண்டுபிடிப்பின் நூற்றாண்டு விழா 1982ஆம் ஆண்டில் நடைபெற்றபோது, காச நோய் மற்றும் இருதய நோய்களுக்கு எதிரான அனைத்துலக அமைப்பு, இந்த நோய் பற்றிவிழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக மார்ச் 24 ஆம் திகதியை உலக காசநோய் நாளாக அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தது. இதை ஏற்று 1996 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் திகதி முதல் உலகக் காச நோய் தினம் கடைபிடிக்கப்படும் என உலகச் சுகாதார அமைப்பு அறிவித்தது.

உலகிலேயே காச நோயாளிகள் அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா முன்னணியில் உள்ளது.

இந்த நோய் மிகச் சுலபமாகப் பரவக்கூடிய ஒரு நோய். காசநோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் இருமினாலோ, சளி மற்றும் எச்சிலைத் துப்பினாலோ அதிலிருந்து வெளிவரும் கிருமிகள் காற்றில் கலந்து மற்றவர்களுக்கு நோயை உண்டாக்கிவிடும்.

நம் நாட்டில் பொது இடங்களில் எச்சில், சளி துப்புவது பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. இருமும்போது

தொடர்ச்சி ▼

# காசநோய் பற்றிய விழிப்புணர்வு மக்களிடம் அவசியம் தேவை!

தொடர்ச்சி▲

வாயையும், மூக்கையும் மூடிக் கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வு குறைவாகவும் அலட்சியம் அதிகமும் உள்ளவர்கள் நம்மிடையே அதிகம். இந்த நோய் அதிகம் பரவ இது முக்கியக் காரணம்.

கூட்டம் அதிகமாக உள்ள பகுதிகளில் இருக்கும் போதும் மருத்துவமனைகள், சிறைகள், ஆதரவற்றோர் முகாம்கள் என எந்தப் பொது இடத்துக்குச் சென்றாலும், முகமூடியை அணிவது நல்லது. இதேபோல் பஸ், ரயில் பயணங்களின் போதும் இதைக் கடைபிடிப்பது காசநோய்த் தடுப்புக்குப் பலனளிக்கும்.

காச நோய்க்கு இன்று மேம்பட்ட சிகிச்சை முறைகள் வந்துவிட்டாலும்கூட, இன்றும் இந்நோயால் பாதிக்கப் படுபவர்களின் எண்ணிக்கை அதிகமாகவே இருக்கிறது. மூன்றாம் உலக நாடுகளில் ஒவ்வோர் ஆண்டும் இந்த நோய்க்கு 17 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர் என்று கூறுகிறது உலகச் சுகாதார அமைப்பு. ஆண்டுதோறும் 80 – 90 லட்சம் பேர் காச நோயால் பாதிப்புக்கு உள்ளா கின்றனர் என்று அந்த அமைப்பு எச்சரிக்கிறது.

பொதுவாக மூச்சுத் தொகுதியில், நுரையீரலைத் தாக்கி நோயை உண்டாக்கக் கூடியவை காச நோய்க் கிருமிகள். இவை நரம்புத் தொகுதி, நிணநீர்த் தொகுதி, இரைப்பை, குடல்தொகுதி, எலும்பு மூட்டுகள், ரத்த சுழற்சிப் பாதை, சிறுநீரகம், பாலுறுப்புகள், தோல் போன்ற பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

ஆரம்பத்திலேயே இதற்கு சிகிச்சை மேற்கொள்வது, நீண்ட கால சிகிச்சை ஆகியவை இந்நோயிலிருந்து பாதுகாக்கும் நடவடிக்கை. காச நோய் உள்ளவர்கள், தயங்காமல் மருத்துவர்களை அணுகி சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். அரசு, காச நோய் பற்றிய விழிப் புணர்வை மக்களிடம் ஏற்படுத்தி, மக்களை காக்க நடவ டிக்கை எடுக்க வேண்டும்.



# ஆரைப்பற்றை சுப்பிரமணியம் வித்தியாலய விளையாட்டு விழா!

(பழுவூரான்)

மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள மட்டக்களப்பு ஆரைப பற்றை சுப்பிரமணியம் வித்தியாலய சிறுவர் மெய்வல்லுனர் விளையாட்டு விழா சனிக்கிழமை (22) ஆரையம்பதி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் திருமதி வதனி டீன்குமார் தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மண்முனைப்பற்றுக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன் பிரதம அதிதியாகவும், மட்டக்களப்பு கல்வி வலய ஆரம்பக்கல்வி இணைப்பாளர் ஏ.பிரகாஷ், பாடசாலைக்கான மேம்பாட்டு இணைப்பாளரும், ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகருமான வி.சந்திரசேகரம் மற்றும் ஓய்வுநிலை பாடசாலைக்கான மேம்பாட்டு இணைப்பாளர் கே.சிவராசா ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும், ஓய்வுநிலை அதிபர்களான ஏ. செல்வநாயகம் மற்றும் கே.தங்கராசா ஆகியோர் அழைப்பு அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது மாணவர்களின் அணிநடை, உடற்பயிற்சிக் கண்காட்சி மற்றும் பழைய மாணவர், ஆசிரியர்களது நிகழ்வுகள் அனைவரையும் கவர்ந்தமை குறிப்பிடத்தக் கது.





# டில்லியில் உயர் நீதிமன்ற நீதிபதி வீட்டில் எரிந்த நிலையில் பெரும்தொகை பணம் மீட்பு



டில்லியில் உயர் நீதிமன்ற நீதிபதி வீட்டில் பாதி எரிந்த நிலையில் பணம் கைப்பற்றப்பட்டது தொடர்பான புகைப்படங்கள், வீடியோ ஆகிய வற்றை உச்ச நீதிமன்றம் வெளியிட்டுள்ளது. இதன்மூலம் நீதிபதியின் வீட்டில் பணம் கைப்பற்றப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மாவின் அரசு இல்லம், துக்ளக் சாலையில் உள்ளது. இங்கு கடந்த 14 ஆம் திகதி இரவு திடீர் தீ விபத்து ஏற்பட்டது. இது குறித்து தகவல் அறிந்ததும், விரைந்து சென்ற பொலிஸாரும், தீயணைப்பு வீரர்களும் தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதற்கிடையே, அங்கு உள்ள அறையில் கட்டுக்கட்டாக பணம் இருந்தது குறித்து அரசுக்கு அதிகாரிகள் தகவல் கொடுத்தனர்.

இதைத் தொடர்ந்து, பணம் கைப்பற்றப்பட்டது தொடர்பாக நீதிபதி யஷ்வந்த் வர்மாவின் விளக்கத்துடன் அறிக்கை தாக்கல் செய்யுமாறு டில்லி உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில், நீதிபதி யஷ் வந்த் வர்மாவுக்கு எதிராக உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியிடம் டில்லி உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி டி. கே.உபாத்யாய் கடந்த 22 ஆம் திகதி அறிக்கை தாக்கல் செய்தார். இதையடுத்து, யஷ்வந்த் வர்மா மீதான புகார் குறித்து விசாரிக்க 2 உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகள் மற்றும் ஒரு உயர் நீதிமன்ற நீதிபதி அடங்கிய 3 பேர் கொண்ட குழுவை சஞ்சீவ கண்ணா நியமித்தார்.

இந்த விசாரணையை முடிக்க காலக்கெடு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. அதேநேரம், யஷ்வந்த் வர்மாவுக்கு இப்போதைக்கு எந்த பணியும் வழங்க வேண்டாம் என்று டில்லி உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன் மூலம், விசாரணை குழு அறிக்கை தாக்கல் செய்யும் வரை, வர்மாவை அலகாபாத் உயர் நீதிமன்றத்துக்கு பணியிட மாற்றம் செய்து ஏற் கெனவே பிறப்பித்த உத்தரவும் நிறுத்தி வைக்கப்படுகிறது.

இதற்கிடையே, நீதிபதி வர்மா வீட்டில் பாதி எரிந்த நிலையில் பணம் கைப்பற்றப்பட்டது தொடர்பான புகைப்படங்கள், வீடியோ ஆகிய வற்றை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியிடம் டெல்லி பொலிஸ் ஆணையர் சஞ்சய் அரோரா வழங்கி உள்ளார். அவற்றை உச்ச நீதிமன்றம் வெளியிட்டுள்ளது. இதன்மூலம் நீதிபதியின் வீட்டில் பணம் கைப் பற்றப்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளது.



# ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட 40 விவசாயிகள் கைது

வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் குழு பரிந்துரைப்படி வேளாண் விளைபொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யாத மத்திய அரசை கண்டித்து சென்னையில் ரயில் மறியல் போராட்டம் நடத்திய தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தினர் 40 பேர் கைது செய்யப்பட்டனர்.

பஞ்சாபில் போராட்டம் நடத்திய விவசாயிகள் கைது செய்யப்பட்டதை கண்டித்து சென்னை, உசிலம்பட்டி, மயிலாடுதுறை, திருப்பூரில் நேற்று ரயில் மறியல் போராட்டம் நடைபெறும் என்று தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் அறிவித்தது.

அதன்படி, சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் மறியல் போராட்டம் நடத்துவதற்காக தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்க நிறுவனர் வழக்கறிஞர் ஈசன் முருகசாமி தலைமையில் விவசாயிகள் சென்றனர். பொலிஸார் தடுத்து நிறுத்தியதையும் மீறி ரயில் நிலையத்துக்குள் சென்று மறியலில் ஈடுபட முயன்றதால் 40 விவசாயிகளும் கைது செய்யப்பட்டனர்.

முன்னதாக, செய்தியாளர்களிடம் பேசிய ஈசன் முருகசாமி,

“விவசாயிகளுக்கு உற்பத்தி செலவுடன் 50 சதவீதம் சேர்த்து, எம்.எஸ். சுவாமிநாதன் குழு பரிந்துரைப்படி வேளாண் விளைபொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்யப்படும் என்று 2014 மக்களவை தேர்தலின்போது பா.ஜ.க. வாக்குறுதி அளித்தது. கடந்த 12 ஆண்டுகளாகியும் இதை நிறைவேற்றவில்லை. அதற்கு கண்டனம் தெரிவித்தும், உடனடியாக அதை நிறைவேற்ற வேண்டும் என்று கோரியும் ரயில் மறியல் போராட்டம் நடத்தப்படுகிறது.

அரசமைப்பு சட்டம் அடிப்படை உரிமையாக வழங்கியுள்ள போராடும் உரிமையை உறுதி செய்ய கோரியும் இப்போராட்டம் நடைபெறுகிறது. சென்னை மட்டுமின்றி, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி, மயிலாடுதுறை, திருப்பூரிலும் ரயில் மறியல் போராட்டம் நடந்துள்ளது. நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டம் தொடரும்.” என்றார்.





# ஹமாஸின் அரசியல் பிரிவு தலைவர் இஸ்ரேலின் தாக்குதலில் உயிரிழப்பு

தெற்கு காசா பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் தங்கள் அரசியல் பிரிவு தலைவர் கொல்லப்பட்டுள்ளார் என ஹமாஸ் அறிவித்துள்ளது.

கொல்லப்பட்டவர்கள் சலா அல்-பர்தவீல் மற்றும் அவரது மனைவி என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதல் நேற்று ஞாயிற்றுக் கிழமை தெற்கு காசா பகுதியான கான் யூனிஸில் நடத்தப்பட்டுள்ளது.

கூடாரமொன்றில் தனது மனைவியுடன் சேர்ந்து தொழுகையில் அவர் ஈடுபட்டிருந்தபோது இஸ்ரேல் இந்த தாக்குதலை நடத்தியதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போது இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல்களில் ஹமாஸ் அமைப்பின் முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர் என்பது குறிப் பிடத்தக்கது.

இதற்கிடையில், காசா பகுதியில் வான், கடல் மற்றும் தரைவழி தாக்குதல்களை தீவிரப்படுத்துவோம் என்று இஸ்ரேல் எச்சரித்திருந்தது.

காசாவில் உள்ள அனைத்து இஸ்ரேலிய பணயக்கைதிகளையும் விடுவிக்கும் வரை இஸ்ரேல் தாக்குதல்களை நடத்த திட்டமிட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# சோமாலியாவில் இடம்பெற்ற விமான விபத்தில் ஐவர் பலி

சோமாலியாவின் மொகடிஷு அருகே நடந்த விமான விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

கென்யாவில் பதிவு செய்யப்பட்ட மேற்படி சரக்கு விமானம், லோயர் ஜூபா பகுதியில் உள்ள டோப்லி நகரத்திலிருந்து ஆபிரிக்க யூனியன் படைகளுக்கு பொருள்களை விநியோகித்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்த போது, விபத்துக்குள்ளானதாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில், மொகடிஷுவிலிருந்து தென்மேற்கே சுமார் 24 கிலோ மீற்றர் தொலைவில்



விமான விபத்து நிகழ்ந்ததாக சோமாலிய சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் உறுதிப்படுத்தியது.

“விமானத்தில் ஐந்து பேர் இருந்தனர், அவர்கள் அனைவரும் துயரமாக உயிரிழந்தனர். விமானம் தோப்லியில் இருந்து புறப்பட்டு ஏடன் அப்துல்லே சர்வதேச விமான நிலையத்திற்கு செல்லும் வழியில் இந்த சம்பவம் நிகழ்ந்தது.” என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆரம்ப அறிக்கைகளின்படி, விமானத்தில் 4 கென்ய நாட்டவர்கள் இருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

சரக்கு விமானம் தோப்லியில் இருந்தபோது சனிக்கிழமை இயந்திரக் கோளாறுகளை சந்தித்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் சோமாலிலாந்து தரநிலையின்படி அது சரி செய்யப்பட்டதாக அறிக்கைகள் மேலும் தெரிவித்தன.

# தென் கொரியாவில் காட்டுத் தீ: 4 பேர் உயிரிழப்பு; 6 பேர் காயம்

தென் கொரியாவின் சான்சியோங் மாகாணத்திலுள்ள வனப்பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீ காரணமாக 4 பேர் உயிரிழந்துள்ளனர். 6 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இக்காட்டுத் தீ காரணமாக அப்பகுதியைச் சுற்றியுள்ள 8 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் காட்டுத் தீயினைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் நூற்றுக்கணக்கான தீயணைப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டனர்.



கனடா முரசு
பக்கங்கள் 03
திங்கட்கிழமை 24.03.2025

## கேசினோகளில் கடன் சூதாட்ட மோசடியில் ஈடுபட்டவர் கைது

ஒன்டாரியோ மாகாண பொலிஸாரின் விசாரணையில், டொரண்டோ பகுதி கேசினோகளில் சட்டவிரோத கடன் வழங்கல் மற்றும் நிதிச் சலவை சம்பந்தப்பட்ட மோசடி 02



# புதிய பிரதமர் பதவியேற்ற 10 நாள்களில் கனடா நாடாளுமன்றம் கலைக்கப்படுகிறது

**கனடாவின் புதிய பிரதமராக பொறுப்பேற்றுள்ள மார்க் கார்னி, நாடாளுமன்றத்தை முன்கூட்டியே கலைத்து பொதுத் தேர்தல் நடத்த அறிவித்துள்ளார்.**

**அதன்படி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வரை பதவிக் காலம் இருக்கும் நிலையில், ஏப்ரல் 28 ஆம் திகதி தேர்தல் நடத்தப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

**கனடாவில் கடந்த 10 ஆண்டுகளாக பிரதமராக இருந்த ஜஸ்டின் ட்ரூடோ மீது மக்கள் மத்தியிலும் ஆளும் லிபரல் கட்சிக்குள்ளும் அதிருப்தி அதிகரித்த நிலையில், அவர் கடந்த மாதம் பதவியை ராஜிநாமா செய்தார்.**

தொடர்ந்து, பொருளாதார நிபுணரான மார்க் கார்னி புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டு கடந்த 14 ஆம் திகதி மார்க் கார்னி அதிகாரப்பூர்வமாக பதவியேற்றார்.

பதவியேற்ற 10 நாள்களில், நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை அறிவித்துள்ள கார்னி, "ட்ரம்ப் நம்மை சிதைக்க நினைக்கிறார். ஆனால், அதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். அவரது அழுத்தங்களை எதிர்கொள்ள வல்ல தலைவரை மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்." என வலியுறுத்தினார்.

343 நாடாளுமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் ஏப்ரல் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் பெரும்பான்மை பெற 172 இடங்களில் வெற்றி பெற வேண்டும்.

இந்நிலையில் கனடாவில் தற்போது, ஆளும் லிபரல் கட்சியும் எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சியும் கடுமையான போட்டியில் உள்ளன.

# தேர்தல் நடவடிக்கைகளில் தீவிரம் காட்டுகிறார் கார்னி

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், கனாடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு வரிவிதிப்பை அதிகரித்ததை அடுத்து இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தகப்போர் தீவிரமடைந்துள்ளது.

இந்த நிலையில் மக்கள் ஆணையை பெறும் வகையில் முன் கூட்டியே தேர்தலை நடத்தும் வகையில் பிரதமர் மார்க் கார்னி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன்படி கனடா நாடாளுமன்றத்திற்கான தேர்தல் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள நிலையில் பிரதமர் மார்க் கார்னி தேர்தல் பிரசாரத்தை தொடங்கியுள்ளார்.

கனடாவில் 2015 ஆம் ஆண்டு முதல் பிரதமராக இருந்து வந்த ஜஸ்டின் ட்ரூடோ கடந்த ஜனவரி மாதம் தனது பதவியிலிருந்து விலகினார்.



இதையடுத்து, கனடா மத்திய வங்கியின் முன்னாள் தலைவரான மார்க் கார்னி புதிய பிரதமராக தேர்வு செய்யப்பட்டார்.அவர் கடந்த 14 ஆம் திகதி கனடாவின் 24 ஆவது பிரதமராக பதவியேற்றார்.

தற்போதைய கனடா நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் வருகிற ஒக்டோபர் மாதம் வரை உள்ள நிலையில் நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு முன்கூட்டியே தேர்தலை நடத்த மார்க் கார்னி அழைப்பு விடுத்தார்.

அதன்படி அடுத்த மாதம் 28 ஆம் திகதி கனடா நாடாளுமன்றத்துக்கு தேர்தல் நடைபெறும் என தெரிகிறது.

தேர்தலுக்கு இன்னும் சில வாரங்கள் இருக்கும் நிலையில் பிரதமர் மார்க் கார்னி பிரசாரத்தை தொடங்கியுள்ளார்.

ட்ரம்பின் வரி விதிப்பு நடவடிக்கைகளால் கனடா-அமெரிக்கா இடையே சிக்கலான வர்த்தக உறவு நீடிக்கும் நிலையில் அதற்கான தீர்வுகளை முன்வைத்து பிரதமர் மார்க் கார்னி பிரசாரம் செய்வார் என அரசியல் நிபுணர்கள் கணித்துள்ளனர்.



# 1.45 மில்லியன் டொலர் மதிப்புள்ள திருடப்பட்ட வாகனங்கள் மீட்பு

பிராம்ப்டனில் 1.45 மில்லியன் டொலர் மதிப்புள்ள திருடப்பட்ட வாகனங்கள் மீட்கப்பட்டதை அடுத்து, இரண்டு பேர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி டெர்ரி ரோடு ஈஸ்ட் மற்றும் பெக்கெட் டிரைவ் அருகே உள்ள ஒரு டிரக்கிங் யார்டும், சரக்கு வாகன திருத்தும் மையத்திலும் நடந்த மோசடியைத் தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

14 திருத்தப்பட்ட டிரெய்லர்கள், 3 திருத்தப்பட்ட சரக்கு வாகனங்கள், 1 திருடப்பட்ட டிரெய்லர், 2 திருடப்பட்ட டிரான்ஸ்போர்ட் வாகனங்கள் மீட்கப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தலுக்காக பயன்படுத்தப்பட்ட இரண்டு டிரெய்லர்களில் குளிரூட்டப்பட்ட அறைகளில் ரஸ்பெர்ரி பழங்களும் மாட்டிறைச்சியும் இருந்தன என தெரிவிக்கப்படுகின்றது.

இதனை மீட்டு உரிய நிறுவனங்களுக்கு பொலிஸார் திருப்பி வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த வெள்ளிக்கிழமை, பொலிஸார் சார் 50 வயது இந்திரஜித் சிங் வாலியா மற்றும் 43 வயது நரீந்தர் ஷோக்கர் ஆகியோருக்கு எதிராக வழக்கு பதிவு செய்தனர்.

இந்த வழக்கு தொடர்பான மேலதிக விசாரணை நடந்து வருவதாகவும், மேலும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தொடர்புடையவர்களை அடையாளம் காணும் முயற்சிகள் தொடர்கின்றன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




## கேசினோகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் 43 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

“Project EVENING” என அழைக்கப்பட்ட இந்த விசாரணை 2024 ஆம் ஆண்டு வசந்த காலத்தில் தொடங்கப்பட்டது.

இது குற்றவியல் வட்டி (Criminal Interest Rate) கொண்ட கடன் வழங்கல், மிரட்டல் மற்றும் நிதிச் சலவை (Money Laundering) உள்ளிட்ட சட்டவிரோத செயல்களில் அவர் ஈடுபட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விசாரணையின் ஒரு பகுதியாக, மிசிசாகா பகுதியில் உள்ள வீட்டில் தேடுதல் நடத்தப்பட்டு, கடந்த செவ்வாய்க்கிழமை தி தவ் ஹோ என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோத வட்டி வழங்கல், மிரட்டல், மோசடி வழியாக பெற்ற சொத்துக்களை வைத்திருத்தல் மற்றும் குற்றவியல் பணமூட்டல் போன்ற குற்றச்சாட்டுகள் மேற்படி நபருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளன.

இந்த வழக்கிற்கான கூடுதல் தகவல்களை பொலிஸார் வெளிப்படுத்தவில்லை. இருப்பினும், கடன் சூதாட்ட மோசடியால் பாதிக்கப்பட்டவர்கள் 1-888-310-1122 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

மேலும், தகவல் வழங்க விரும்பும் நபர்கள் 1-800-222-TIPS (8477) அல்லது ontariocrimestoppers.ca வழியாக அனாமதேயமாக புகார் செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.







# டொனால்ட் ட்ரம்பின் கொள்கைகளை எதிர்த்து அமெரிக்க – கனடா எல்லையில் ஆர்ப்பாட்டம்

அமெரிக்க - கனடா எல்லைப் பகுதியில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு எதிராக போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வின்ட்சர்-டெட்ராய்ட் எல்லையில் உள்ள இருநாடுகளின் குடிமக்கள், அமெரிக்கா ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மேற்கொண்ட வர்த்தக கொள்கைகள் மற்றும் அரசியல் பேச்சுக்கள் மீது எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

வின்ட்சரில், நூற்றுக்கணக்கான மக்கள் கனடியக் கொடியின் கீழ், ஊல்லேட் அவென்யூவின் அருகே இருந்தனர்.

டெட்ராய்ட் நதியின் மறுபுறம், அமெரிக்கர்கள் ஹார்ட் பிளாசாவில் கூடியிருந்தனர். இருதரப்பினரும் ஒருமித்துக் குரலெழுப்பினர்.

“ட்ரம்ப் அமெரிக்காவை மகத்தானதாக இல்லை, வெறுப்பின் அடிப்படையில் செயல்படும் நாடாக மாற்றுகிறார்,” என வின்ட்சர் வாழ் நிக்கோல் டியூப் என்பவர் கூறினார்.

மணிநேரக் கால ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட வின்ட்சர் குடிமக்கள், அமெரிக்க மக்களுக்கு தங்களது ஆதரவை வெளிப்படுத்த விரும்பினர்.

“இது அமெரிக்க மக்களுக்கெதிரான எதிர்ப்பு அல்ல, ட்ரம்ப்பிற்கு எதிரானது,” என அலன் மெக்லாக்லின் என்பவர் தெரிவித்தார்.

ட்ரம்பின் வர்த்தக வரிகள் மற்றும் “கனடா அமெரிக்காவின் 51-வது மாநிலமாக அமைய வேண்டும்” என்ற அவரது பேச்சுக்களுக்காக, சில கனடியர்கள் அமைதியான எதிர்ப்பாக அமெரிக்கா செல்லும் பயணங்களை குறைத்து வருகின்றனர். இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம், கனடியர்களும் அமெரிக்கர்களும் அரசியலை மீறிய உறவை கொண்டுள் ளார்கள் என்பதைக் காட்ட வேண்டும் என்பதே நோக்கம் என ஆர்ப்பாட் டத்தை ஏற்பாடு செய்த ஆட்ரி டுபாய்ஸ் கூறினார்.







